# திராவிட முன்னேற்றக் கழகத்தை தனிமைப்படுத்தும் அரசியல் சக்தி தமிழ் மண்ணில் என்றும் உருவாகப்போவதில்லை!

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஆளுங்கட்சியாவதற்கான எண்ணிக்கை பலத்தை தி.மு.க. எட்டவில்லை என்பதனாலும், தி.மு.க.வுடன் மதச்சார்பற்ற கூட்டணியில் இடம்பெற்ற சில அரசியல் கட்சிகள் விலகிச் சென்றமையாலும், தி.மு.க தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது என்ற விமர்சனம், சில அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது.

இத்தகைய விமர்சனத்தை முன்வைப்பவர்கள் தேர்தல் கூட்டணி பற்றியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டமைப்பு பற்றியோ, அரிச்சுவடி கூட அறியாதவர்களாகத்தான் இருக்க முடியும். தேர்தல் காலக்கூட்டணி என்பது சில பொதுவான திட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக மதவாத சக்திகளுக்கு எதிராக அமைக்கப்பட்ட கூட்டணிதான், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற கூட்டணியாகும்.

**இந்தத் தேர்தல் கூட்டணிக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பினை மக்கள் இம்முறை வழங்கவில்லையெனில், அடுத்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான முயற்சியினையும், ஆக்கப்பூர்வமான திட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும் செயல்படுத்தும். தேர்தல் முடிந்த பின்னர், மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற அரசியல் கட்சிகளைப் பற்றி கவலைப்பட வேண்டிய கட்டாயமோ, அவசியமோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதியாக இல்லை.**

ஆனால் பிரிந்து சென்ற சில அரசியல் கட்சிகள் தங்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காகவும், கொள்கை வேறுபாடுகளை சுட்டிக்காட்ட இயலாமையாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது என்ற விமர்சனத்தை மட்டும் முன்வைக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனிமைப்படுத்தப்படவில்லை மாறாக, திராவிட முன்னேற்றக் கழகம் தலைமை வகித்த மதச்சார்பற்ற கூட்டணியிலிருந்து பிரிந்து சென்றமைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். கழகச் செயல்வீரர்கள் வேகத்தடையில்லாத பந்தயத் திடலில் எதிரணியை எதிர்கொள்ள தயாராகி விட்டார்கள்.

**இனி திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளவிருக்கும் மின்னல்வேக அரசியல் செயல்பாடுகளை எதிர்கொள்ளவிருக்கும், எட்டாக்கனியை எட்டிப்பிடிக்க முடியாமல், ஏமாந்துபோய், இந்தப் பழம் புளிக்கும், எனப் பொய்யுரைத்துவிட்டு அடுத்த தோட்டத்து பழமரம் நோக்கிப் பயணம் மேற்கொண்டுள்ள வேடந்தாங்கல் விநோதப் பறவைகளும் அரசியல் நடைபாதைச் சிறுவியாபாரிகளும் வெகுவிரைவில் நிச்சயம் உணர்வார்கள்!!**

திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த சக்தியாலும் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் தனிமைப்படுத்திவிட இயலாது என்பது வரலாறு. கடந்தகாலத்தில் அப்படிப்பட்ட விபரீத முயற்சியில் ஈடுபட்டவர்கள் எந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை வரலாறு தெளிவாக பதிவுசெய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை “தரைமட்டமாக்குவோம்”, “மூட்டை பூச்சியைப் போல நசுக்கிவிடுவோம்” என்ற அரசியல் தலைவர்கள் எல்லாம் தடயம் தெரியாமலே போய்விட்டார்கள் என்பது கடந்தகால வரலாறு.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

**திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு அரசியல்கட்சி என்பதைவிட, தமிழ் இனத்தையும், தமிழ் பண்பாட்டையும் மீட்டெடுத்து போற்றிக் காப்பாற்றுவதற்காக பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்! இந்த இயக்கம் அண்ணன் தம்பி என்ற குடும்பபாச உணர்வோடு உருவாக்கப்பட்டு, பல தலைமுறைகளையும் கடந்து ஆலமரம்போல் படர்ந்து விரிந்து வேர்களாலும், விழுதுகளாலும் காலத்தை வென்று இன்றும் இன்னும் பலநூறு ஆண்டுகள் தமிழினம் உள்ளமட்டும் இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, இந்த இயக்கம் தமிழினம் உள்ளமட்டும் காலமாற்றங்களை உள்வாங்கிக்கொண்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டும் தான் இருக்கும்!**

ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்ட இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் ஒவ்வொரு நாடாளுமன்ற சட்டமன்றங்களுக்கான தேர்தல்களில் ஆட்சிமாற்றங்கள் மக்களால் உருவாக்கப்படுவது இயல்பான நடவடிக்கைதான்.

ஜனநாயக ஆட்சிமுறையை முழுமையாக ஏற்றுக்கொண்ட இயக்கம் மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கு பேராபத்து வந்த காலகட்டத்தில், ஆட்சியையே விலையாகக் கொடுத்து ஜனநாயகத்தை மீட்டியது திராவிட முன்னேற்றக் கழகமாகும்! இந்தத் தேர்தல் பின்னடைவை இயல்பாக எடுத்துக் கொள்வதோடு, அதற்கான காரணங்களையும், மாற்றங்களையும் ஆய்வுசெய்து உரிய தீர்வுகாணும் என்பது மட்டும் உறுதி!

இன்றைய விரைவான அறிவியல் வளர்ச்சியின் காரணமாக “உலகம்” என்ற நீண்ட நிலப்பரப்பை, ஓர் கிராமம் (Global Village) என்று சொல்லத்தக்க அளவிற்கு செய்திகள் தகவல்கள் (Information) உடனடியாக உலகின் ஒரு முனையிலிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் மின்னல் வேகத்தில் பரவிவிடுகிறது. வாழ்வியல் மாற்றங்களும் விரைவாக நடைபெறுகின்றன. உணவில் உண்ணும் முறையில்கூட “விரைவுஉணவு” (Fast Food) முறை பிரபலமடைந்துள்ளது.

எனவே, **காலமாற்றங்களுக்கேற்ப எதிர் கால சமுதாயத்தின் வார்ப்படங்களாம் இளை ஞர்களின் எதிர்பார்ப்புகளை ஆய்வுசெய்து, அதற்கான சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு எதிர்கால சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்புகளை திராவிட முன்னேற் றக் கழகம் நிச்சயம் உருவாக்கும். திசைமாறிய இளைஞர்களை விழிப்புணர்வு பெறச்செய்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை கால மாற்றங்களைச் எதிர்கொள்ளும் வல்லமைபெற்ற இயக்கமாக மாற்றுவோம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.**

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்வோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இளைஞர் அணியின் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகிய கழகக் காப்பாளர்களின் புதிய சிந்தனையால் உருவாகும் செயல் திட்டங்களை தமிழ்நாட்டு மக்களிடமும் குறிப்பாக, இருபால் இளைஞர்களிடம் எடுத்துரைத்து அவர்கள் விழிப்புணர்ச்சி பெற்றிடச் செய்வோம், தமிழ்மக்களின் உள்ளங்களை வெல்வோம், நாளைய நமது தமிழ்நாட்டை நவீனப்படுத்திட, இன்றைய இளைஞர்கள் மூலம் வழித்தடம் அமைப்போம் வாரீர்! நாம் மேற்கொண்டுள்ள பயணத்தின் வெற்றி வெகுதொலைவில் இல்லை.

## த.வெ.க. ஆட்சியில் பெண்களின் நிலைமை கேள்விக்குறி!

# கோவை விராலியூரில் இளம்பெண் பலாத்காரம்!

## 60 வயது யோகா ஆசிரியர் கைது!

கோவை, ஜூன் 26 –

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய முதலமைச்சராக பொறுப் பேற்ற விஜய் ஜோசப் அவர்களின் தலைமையி லான தவெக ஆட்சியில் நாளொரு மேனியும்பொழுதொருவண்ணமாக குற்ற செயல்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மேலும் பெண்களின் நிலைமை மிகவும் கேள்வி குறியாக உள்ளது.

கோவை தொண்டா முத்தூர் அருகேவிராலியூரில்உள்ளவாடகை வீட்டில் திருவண்ணாமலையைச் சேர்ந்த அருணன் (60) தனது மனைவி பிரியாவுடன் வசித்து வருகிறார். இன்சூ ரன்ஸ் ஏஜெண்டானஅருணன்,யோகாஆசிரியராகவும்உள்ளார்.இவரதுபக்கத்துவீட்டில் தேனியைச் சேர்ந்த 22 வயது இளம்பெண் தனது தோழிகள் 5 பேருடன் வசித்து வருகிறார்.

இளம் பெண்கள் தனியார் நிறுவனத்தில் ஷிப்ட் முறை யில் வேலை பார்த்து வரு கிறார்கள். 6 இளம் பெண் களுக்கும் அருணன் வீட்டில் மாத மாதம் பணம் செலுத்தி சாப்பிட்டு வந்தனர்.

நேற்று முன்தினம் 5 இளம் பெண்கள் வேலைக்கு சென்றிருந்த நிலையில் 22 வயது இளம் பெண் மட்டும் அருணன் வீட்டில் நேற்று காலைசாப்பிடவந்தார்.அருணனின் மனைவி பிரியா உடல் நலம் சரியில்லாமல் தனி அறையில் ஓய்வெடுத்தார்.

இளம் பெண் சாப்பிட்ட பின்னர் பிளேட்டைசுத்தம்செய்யமுயன்றார். அப் போது, திடீரென அருணன் இளம்பெண்ணை கட்டிப் பிடித்து முத்தம்கொடுத்துபலாத்காரம்செய்ய முயன்றார்.

இதனால், அதிர்ச்சியடைந்த இளம்பெண்அலறிசத்தம்போட்டார். சத்தம்கேட்டுஅக்கம்பக்கத்தினர்ஓடி வந்து அருணனுக்கு தர்ம அடி கொடுத்து இளம்பெண்ணை போராடி மீட்டனர். இது குறித்து ஆலாந்துறை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து அருணனை கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

தவெகஆட்சிபொறுப்பேற்றதில் இருந்து சட்டம் ஒழுங்கு கேள்விக் குறியாகி இருப்பது குறிப்பாக தமிழ்நாட்டின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மக்களிடையேபெரும்அச்சத்தைஏற்படுத்தி உள்ளது.

## பழனி தண்டாயுதபாணி திருக்கோவிலில்

# விஜய் படத்துடன் தங்கத்தேர் இழுத்து த.வெ.க.வினர் அத்துமீறல்!

## த.வெ.க.-வினரின் அத்துமீறலுக்கு பக்தர்கள் கண்டனம்!

*பழனி, ஜூன் 26 -*

*பழனி முருகன் கோயில் மலை மீது விஜய் படத்துடன் த.வெ.க.வினர் அத்துமீறி தங்கத்தேர் இழுத்ததால் பக்தர்கள் அதிருப்தி அடைந்தனர்.*

*பழனி முருகன் கோயில் மலை மீது தினமும் மாலை நேரத்தில் தங்கத்தேரில் முருகன் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*பக்தர்கள் பலரும் தங்கத்தேர் இழுத்து முருகனை வழிபட்டுச் செல்கின்றனர். இந்நிலையில் விஜயின் பிறந்த நாளை யொட்டி த.வெ.க. நிர்வாகிகள் தங்க தேர் இழுத்து வழிபட்டனர்.*

*அப்போது தங்கத்தேர் முன்பாக விஜய் படத்தை வைத்துக்கொண்டு தேரை இழுத்துச் சென்றனர்.*

*பழனி மலை மீது எந்த அரசியல் கட்சித் தலைவர்களின் படத்தையும் கோயில் நிர்வாகம் அனுமதிப்பதில்லை.*

*ஆனால், த.வெ.க. நிர்வாகிகளின் இந்த செயலை கோவில் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.*

*மேலும், இந்த அத்துமீறலை தவெக நிர்வாகிகள் புகைப்படமாக எடுத்து சமூக வலைதளத்திலும் பரவ விட்டுள்ள னர். தவெகவினரின் இந்த செயலுக்கு இந்து அமைப்புகள் மற்றும் பக்தர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

## அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த

# திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நமக்கு நாமே திட்டம் தொடருமா?

## எதிர்பார்ப்பில் பள்ளி நிர்வாகம்!

திருப்பூர், ஜூன் 26 –

திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் ஆடை உற்பத்தித் தொழில் நிமித்த மாக வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநில தொழிலாளர்களின் வருகை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. இவர்களின் குழந்தைகள் மற்றும் ஏழை, எளிய மக்களின், குழந்தைகளின் கல்வி தேவைக்கு அரசு பள்ளிகளே முதன்மை தேர்வாக உள்ளது.

கழகத் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட காலை உணவுத்திட்டம், உள்ளிட்ட பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்க ளால், நடப்பு கல்வி ஆண்டிலும் திருப்பூர் மாநகராட்சி மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகள், கழிவறைகள் உள்ளிட்ட கூடுதல் உள்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தற்போது தொய்வு ஏற்பட்டுள்ளதாக கல்வி ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில், அரசு பள்ளிகள் குடியிருப்பு பகுதிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் உள் கட்டமைப்பை மேம்படுத்த ”நமக்கு நாமே திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அல்லது தன்னார்வலர்கள் தாங்களாக முன்வந்து வழங்கிய நிதி பெறப்பட்டு. மீதித் தொகையை அரசே ஏற்று பணிகள் செய்யப்பட்டன. இதன் மூலம் திருப்பூரில் உள்ள பல அரசு பள்ளிகளில் நவீன கழிவறைகள், ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சில பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டி டங்கள் கட்டப்பட்டன.

திருப்பூரின் பின்னலா டைத் தொழில் அதிபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு அரசு பள்ளிகளுக்கு நிதி வழங்கி, உள்கட்டமைப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்றனர். நடைமுறைப்படி, இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை தன்னார்வலர்கள் மாவட்ட ஆட்சியர் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் ஆணையர்களிடம் வழங்கி அதற்கான ரசீது பெற்றுக் கொள்வார்கள். அல்லது அதன் பின்னரே அரசாங்கத்தின் பங்களிப்பு நிதியும் சேர்க்கப்பட்டு, முறைப்படி உள்கட்டமைப்பு பணிகள் பொதுப்பணித்துறை அல்லது உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தொடங்கி நடைபெறும். தற்போது பள்ளிகள் திறந்து முழு வீச்சில் வகுப்புகள் நடந்து வரும் தற்போதைய சூழலில், இடநெருக்கடி மற்றும் கூடுதல் கழிவறைகளின் தேவை உருவாகியுள்ளது.

கடந்த திராவிட மாடல் ஆட்சி காலங்களில் கைகொடுத்த ”நமக்கு நாமே திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?, புதிய அரசு இத்திட்டத்தை இதே முறையில் முன்னெடுக்கிறதா? என்பது குறித்து அரசு பள்ளி நிர்வாகங்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் இன்னும் கிடைக்கவில்லை எனக்கூறப் படுகிறது. திருப்பூர் போன்ற தொழிலாளர்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில், அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்பை வெறும் அரசு நிதியை மட்டுமே நம்பி உடனடியாக மேம்படுத்துவது கடினம் என்பதால், இந்த மக்கள் பங்களிப்பு திட்டங்களை தற்போதைய புதிய அரசும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் அல்லது அதற்கு இணையான மாற்று வழிகாட்டுதல்களை துரிதமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து அரசு பள்ளி தலைமை ஆசிரியர் ஒருவர் கூறுகையில், ”எங்கள் பள்ளியில் இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை நன்றாக உள்ளது. கூடுதல் வகுப்பறைகளும், கழிவறை வசதிகளும் அவசரமாக தேவைப்படுகின்றன. கடந்த கல்வி ஆண்டில் ”நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் உருவாக்கப்பட்டது. தற்போதும் தேவைகள் உள்ளது. கல்வி சேவைக்கு உதவிட பலரும் தயாராக உள்ளனர்.

ஆனால், இந்த திட்டம் புதிய அரசின் கீழ் தற்போதும் நடைமுறையில் உள்ளதா? மாவட்ட ஆட்சியரிடமோ அல்லது மாநகராட்சி ஆணையரிடமோ நிதியைச் செலுத்தி ரசீது பெறும் பழைய நடைமுறையை தொடரலாமா? என்பது குறித்து சுற்றறிக்கை இன்னும் வரவில்லை. இதனால், தன்னார்வலர்களிடம் இருந்து நிதியை பெற்று முறைப்படி பணிகளை தொடங்க முடியாமல் குழப்பத்தில் உள்ளோம். தற்போதைய தேவைகளை உணர்ந்து அரசு விரைவில் தங்கள் கொள்கை முடிவை அறிவிக்க வேண்டும் என்றார்.




கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, அதனை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி, அந்த மனுக்கள் மீது உடனடியாகத் தீர்வுகாண அறிவுறுத்தினார். இதில் மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, துணை மேயர் வெற்றிச்செல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், ர.சரஸ்வதி, மாநகர தலைமைப் பொறியாளர் விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் சைகை ஆரோக்கியமான பண்பாடான செயல் அல்ல!

## தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!



*சென்னை, ஜூன் 26 -*

*முதல்வர் விஜய்யின் பதிலுரைக்கு பின் தலைமைச் செயலக வளாகத்தில் மனித நேய ஜனநாயக கட்சி சட்டமன்ற உறுப்பினர் தமீ முன் அன்சாரி நிருபர்களிடம் கூறியதாவது:-*

*பேரவையின் மாண்பையும், மரபுகளையும் சினிமா படப்பிடிப்பு தளமாக மாற்றுவது ஆரோக்கியமானது அல்ல. மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ள முதலமைச்சர், தாங்கள் நல்லா ட்சியை வழங்குவோம் என்று தொடர்ந்து கூறி வருகிறார்.*


*அவ்வாறு கூறும் முதலமைச்சர், தன்னுடைய முதல் பதிலுரையிலேயே சைகை மூலமாகப் பேசியிருப்பது ஏற்கத்தக்கதல்ல. இந்த சைகை எதைக் காட்டுகிறது? எதிர்க்கட்சிகளை மொத்தமாக முடித்து விட்டோம் என்ற சைகையை வெளிப்படுத்துகிறதா?*

*மக்களை வசியப்படுத்துவதற்காக திரைப்பட வசனங்களில் எதை வேண்டுமானாலும் வெளிப்படுத்தலாம், அது அவரவர் விருப்பம். ஆனால், சட்டப்பேரவையில் இப்படிப்பட்ட சைகைகளைச் செய்வது, அதுவும் ஒரு முதலமைச்சர் செய்வது, ஆரோக்கியமான போக்காகத் தெரியவில்லை.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அ. இராசமாணிக்கம்**
**ஜூன் 26 (2016)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**